(இ) 1961-62 ஆண்டுகளில் எத்தனை பேர்கள் கண் தானம் செய்தார்கள் ?

(உ) இவ்வாறு இறந்தவர்களின் கண்களைச் சேகரிக்க அவர்களின் வாரிசுகளுக்கு நன்கொடை ஏதேனும் அளிக்கப்படுகிறதா ? எவ்வளவு ?

(ஏ) 1961-62 ஆண்டுகளில் எவ்வளவு தொகை அளிக்கப்பட்டது ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** (அ) மூன்று.

(இ) மூன்று.

(உ) இல்லை.

(ஏ) இந்தக் கேள்விக்கு இடம் இல்லை.

### மணிமேகலா அனாதை இல்லம்

* 188 கேள்வி.—**திரு. கி. நாராயணசாமி பிள்ளை :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1962-63-ல் சிதம்பரம் தாலூகா சேத்தியாத்தோப்பு மணிமேகலா அனாதை இல்லத்திற்கு எவ்வளவு போர்டிங் கிராண்ட் வழங்கப்பட்டது ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : No grant has been paid during 1962–63 to this Orphanage. The matter is under consideration.

### *Industrial Training Institute, Gingee taluk*

* 189 *Q.*—SRI G. RAJARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to start an Industrial Training Institute in Gingee taluk during the Third Five-Year Plan?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இல்லை.

### தொழிற்பேட்டைகள்

* 190 கேள்வி.—**திரு. ஆ. கு. சுப்பையா,**

**திரு. கி. நாராயணசாமி பிள்ளை :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964-ல் இம்மாநிலத்தில் சர்க்கார் எத்தனை தொழிற்பேட்டைகள் அமைக்க உத்தேசித்திருக்கிறார்கள் ?

(இ) தஞ்சை மாவட்டத்தில் எத்தனை தொழிற்பேட்டைகள் அமைக்கப்படும் ?